அதுதான் நியாயம். இப்போது சினிமா கருத்தரங்குக்குக் கொடுத்தது போல, நாளைக்கு மைதா மாவு தயாரிப்பாளர்கள், ஜெராக்ஸ் கடைக்காரர்கள், முடி திருத்துவோர் சங்கம், என்று ஒவ்வொரு தொழிலிலும் இருப்போர் கருத்தரங்குகள் நடத்தினால், கலைஞர் அரசு நிதியை அள்ளி வீசுவாரா?

சமூக அக்கறை உள்ளவராகத் தன்னை எப்போதும் அடையாளப்படுத்தி வரும் கமல்ஹாசன், கொஞ்சமாவது மனசாட்சியின் உறுத்தல் இருக்குமானால், 50 சினிமா தயாரிப்பாளர்களிடமிருந்து ஆளுக்கு ஒரு லட்சம் வசூலித்து அரசுப் பணத்தைத் திருப்பித் தர வேண்டும்.

## கொதிப்பு 2

மும்பையில் சென்ற வருடம் நவம்பரில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியபோது, தீவிரவாத எதிர்ப்புப் படை தலைவர் ஹேமந்த் கர்காரே தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் அணிந்திருந்த புல்லட் தடுப்புக் கவசம் அவரைக் காப்பாற்றவில்லை.

அவரைக் கொன்ற எட்டு புல்லட்டுகளில் மூன்று வலது நெஞ்சில் கவசத்தைத் துளைத்துக் கொண்டு உள்ளே பாய்ந்தவை என்று பிரேதப் பரிசோதனை அறிக்கை கூறியிருக்கிறது. கர்காரே அணிந்திருந்த கவசம் 2004ல் மும்பை காவல் துறையால் வாங்கப்பட்ட கவசங்களில் ஒன்று.

அப்போது அந்தக் கவசங்களில் சிலவற்றை சோதித்துப் பார்க்க கோரேகானில் இருக்கும் காவல் துறை துப்பாக்கி சுடும் பயிற்சிக் களத்துக்கு அனுப்பினார்கள். சோதனையில் குண்டுகள் கவசத்தை துளைத்துவிட்டன. உடனே இது பற்றி புகார் எழுப்பப்பட்டது.

மொத்த கவசங்களையும் சப்ளை செய்யும்போது, தரம் மேம்படுத்தப்படும் என்று (வியாபாரிகளால்) சொல்லப்பட்டிருப்பதால், ஆர்டரை ரத்து செய்யவேண்டாம் என்று கோப்பில் எழுதப்பட்டிருக்கிறது. தரம் ‘மேம்படுத்தி’ சப்ளை செய்த கவசத்தில் ஒன்றைத்தான் கர்காரே அணிந்துகொண்டுபோய்ச் செத்தார்.

கர்காரே சாகும்போது அணிந்திருந்த கவசத்தை சோதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை, அவர் மனைவி கவிதா முன்வைத்தார். அரசிடமிருந்து பதில் இல்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கவிதா, அந்தக் கவசம் எங்கே என்று கேட்டு மனு செய்தார்.